# சித்தர் பாடல்களில் காணப்படும் ஆன்ம ஈடேற்றத்துக்கான தடைகளும் அவற்றைக் களைவதற்குரிய வழிகளும்

கோவி. சிவபாலன்
இந்திய ஆய்வியல் துறை
மலாயாப் பல்கலைக்கழகம்

## முன்னுரை

தமிழர்ப் பண்பாட்டில் எந்நாளும் சிறப்பிடம் பெற்று விளங்குபவர்கள் சித்தர்கள். சித்தத்தை எக்கணமும் சிவன்பால் வைத்ததனால் இவர்கள் சித்தர் என அழைக்கப்படுகின்றனர். மனமாயைகளின் தன்மைகளையும் உயிர் என்னும் சீவனின் தன்மைகளையும் நன்கறிந்து தெளிந்து, பின் சீவனையே சிவனாகக் கொண்டு பேரானந்த வாழ்க்கை வாழ்பவர்கள் சித்தர்கள். இவர்கள் மக்களோடு மக்களாக எந்தச் சூழலில் கலந்திருந்தாலும் அவர்களுடைய சித்தம் எப்போதும் சிவம் என்னும் பூரணத்திலேயே ஒன்றியிருக்கும். இவர்கள் மொழி, சமயம், காலம், நாடு என்னும் எல்லைகளை எல்லாம் கடந்தவர்கள். சித்தர்கள் கால வரையறைக்கு அப்பாற்பட்டவர்களென்றாலும் இலக்கியச் சான்றுகளைக் கால வரையறைச் செய்வதற்குரிய அளவுக்கோலாகக் கொண்டு சித்தர்களின் காலம் கி. பி. 5–இம் நூற்றாண்டின் முற்பகுதி என்பர்.[1] உலகமெங்கும் சித்தர்கள் இருந்தாலும் தமிழ் நாட்டுச் சித்தர்களுக்கென தனிச் சிறப்புண்டு. இவர்கள் பதினெண் சித்தர்கள் என அழைக்கப்படுகின்றனர். தமிழ் நாட்டுச் சித்தர்கள் விட்டுச் சென்றுள்ள இலக்கியச் செல்வங்கள் எக்காலமும் மனுக்குலத்தின் மிகச்சிறந்த வழிகாட்டியாகத் திகழ்கின்றன.

தாம் பெற்ற பேரின்பத்தை இப்பெருநில மக்களும் பெற்று இன்புற வேண்டும் என்னும் பெருநோக்கில், தாங்கள் அறிந்ததையும் உணர்ந்ததையும் சித்தர்கள் பாடல்களாகப் பாடிவைத்துள்ளனர். இப்பாடல்கள் இன்று சித்தர் பாடல்கள் எனவும் சித்தர் ஞானக்கோவை எனவும் பலவாறாகத் தொகுக்கப்பட்டுள்ளன. இப்பாடல்களில் காணப்படும் கருத்துகளை நோக்கும் பொழுது அவை மக்களின் நிலையறிந்து அவரவர் பக்குவத்துகேற்ப சித்தர்களால் பாடப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. சித்தர் பாடல்கள் மறைபொருள் உத்திகள் நிரம்பியவை. மேலோட்டமாகப் பார்த்தால், மருத்துவம், யோகம், இரசவாதம், மாந்திரீகம் போன்ற கருத்துகளைப் பாடுபொருளாகக் கொண்டு சித்தர் பாடல்கள் இயற்றப்பட்டிருப்பது போல் தோன்றும். ஆனால் ஆழ்நிலையில், அவையனைத்தும் மனமாயையை அகற்றி ஆன்ம ஈடேற்றம் காண்பதற்குரிய வழிவகையைச் கூறும் மறைபொருள் பாடல்களாகவே அமைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. அழுத்தங்களும் நெருக்குதல்களும் நிறைந்த இன்றைய உலகியல் வாழ்க்கையில் மூவாசைகளை அடக்குவதும் மனங்களை அமைதிபடுத்துவதும் முக்கியத் தேவைகளாகவும் தேடல்களாகவும் உள்ளன. இத்தேடல்களுக்குரிய சிறந்த ஞான விடைக்களஞ்சியமாக சித்தர் பாடல்கள் விளங்குகின்றன.

## ஆய்வின் நோக்கம்

இதுநாள்வரை சித்தர் பாடல்களைப் பலரும் பல்வேறு கோணங்களில் ஆராய்ந்து கட்டுரைகளையும் நூல்களையும் வெளியீடு செய்துள்ளனர். அவற்றுள் பெரும்பான்மையான படிவங்கள் முறையான ஆய்வு நெறிக்கு உட்படுத்தப்படாத, எளிமைப்படுத்தப்பட்ட படைப்புகளாக மட்டுமே உள்ளன. அவை யோகம், இரசவாதம், மந்திரம், பாடல் நயம் போன்ற கூறுகளை மையமாகக் கொண்டு படைக்கப்பட்டுள்ளன. சித்தர் பாடல்களின் உயிர்நாடியாக விளங்குபவை மனிதகுலத்தின் துன்பத்துக்குக் காரணமாக மூவாசைகளும் அவற்றை வென்று வாழ்வதற்குரிய வழிமுறைகளும் ஆகும். ஆனால், ஆன்ம ஈடேற்றத்தில் குறுக்கிடும் இதுபோன்ற தடைகளையும் அதை களைவதற்கான வழிகளையும் உள்ளடக்கிய முறையான ஆய்வேதும் இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரியவில்லை. இக்குறையைப் போக்கும் வண்ணம் எழுந்துள்ள இக்கட்டுரை கீழ்க்காணும் இரண்டு நோக்கங்களை மையமாகக் கொண்டது.

1. சித்தர்கள் குறிப்பிடும் ஆன்ம ஈடேற்றத்துக்குரிய தடைகளைச் சித்தர் பாடல்களில் கண்டறிதல்.
2. சித்தர்கள் குறிப்பிடும் ஆன்பம ஈடேற்றத்துகுரிய வழிகளைச் சித்தர் பாடல்களில் கண்டறிதல்.

## ஆய்வின் வரையறை

சித்தர் பாடல்களில் ஆன்ம ஈடேற்றத்துகுரிய பல்வேறு தடைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றுள் அடிப்படைத் தடைகளாக விளங்குகின்ற மூவாசைகள், ஐம்புலன்கள், மனம், பற்று, வாசனை, ஆகிய கூறுகளை மட்டுமே இக்கட்டுரை ஆராய்கிறது. ஆன்ம ஈடேற்றத்துக்கென பல வழிகளைச் சித்தர்கள் பாடியிருந்தாலும் ஒழுக்கம் போற்றலை மட்டுமே இக்கட்டுரை ஆய்வுக்கு உட்படுத்துகிறது. சித்தர் பாடல்களைக் கொண்ட பல்வேறு தொகுப்பு நூல்கள் தற்போது பயன்பாட்டில் இருந்தாலும் சித்தர் பெரிய ஞானக் கோவையை[2] மட்டுமே இக்கட்டுரை முதன்மை நூலாகப் பயன்படுத்துகிறது.

## மூவாசைகள்

உடம்பினால் பெற்ற உறு பயன் எல்லாம் இறைவனைத் தேடுதலும் அவ்விறைவனை உடலில் காண்பதுமே என்னும் கொள்கையைச் சித்தர்கள் கொண்டிருந்தனர். இறைவன் உறையும் உடல் மரணத்தால் அழிவதற்கு முன், அவ்விறைவனை அகத்துள் காண இயலாமைக்குப் பல காரணங்களைத் தடைகளாகச் சித்தர் கூறுவர். அத்தடைகளை எல்லாம் அகற்றி மனத்தைச் செந்நெறிக்குக் கொணர்வதே சித்தர் நெறியாகும். மனிதன் தோன்றிய நாள்தொட்டு அவனோடு உடன் உறையும் மலங்களை நீக்க முயல வேண்டும். இவ்வாறு மக்கள் நீக்கவேண்டியவற்றுள் முதன்மையானது மூவாசையாகும். இம்மூவாசைகளில் மூழ்காத மனிதர்களே இல்லை எனலாம். இவ்வாசைகளை வென்றவர்களே இறையுண்மையை உணர இயலும். மக்கள் அனைவரும் இறை நெறியைப் போற்ற வேண்டும் என்னும் பெருங்கருணையால் மூவாசைகளின் தீமைகளையும் அவற்றை நீக்குகின்ற வழியையும் சித்தர்கள், பாடல்களின் வழி விளக்கியுள்ளனர். மூவாசைகளுள் முதன்மையானதாக இருப்பது பெண்ணாசையாகும்.

## பெண்ணாசை

இவ்வுலகில் உயிர்களின் தோற்றமும் அழிவும் பெண்ணாலேயே உண்டாகின்றன எனவும், உலகிலுள்ள மாயமும் இந்திரியமும் வாசனையும் அனைத்தும் பெண்ணால் தான் எனவும் சித்தர்கள் உறுதியாக நம்பினர். இக்கருத்தை,

‘காணப்பா பிறப்பிறப்புப் பெண்ணாலாச்சு
கை கடந்த மாயமெல்லாம் பெண்ணாலாச்சு
பூணப்பா இந்திரியம் பெண்ணாலாச்சு
புகழ்பெரிய வாசனையும் பெண்ணாலாச்சு’[3]

எனச் சட்டைமுனி கூறுவதால் அறியலாம். உலகில் பெண்ணழகைப் பூவையென்றும் பாவையென்றும் பொன்னேயென்றும் பூந்திருவேயென்றும் பொக்கிஷம் என்றும் கோதை என்றும் கோகிலமென்றும்[4], மயிலென்றும் குயிலென்றும் மாணிக்கமென்றும் மானேயென்றும் தேனேயென்றும் வானமுதமென்றும் ஒயிலான வண்ண மயிலுக்கு ஒத்தவளென்றும்[5], மின்னற் கொடியென்றும் சோதி விளக்கென்றும் மெல்லியென்றும் வல்லியென்றும் மேனகையென்றும் கன்னற் கட்டி என்றும் சீனிக் கற்கண்டென்றும்[6] புகழுவர். ஆனால் இவையனைத்தும் பொய்யென்று உணர்ந்தவர்கள் சித்தர்கள்.

சிக்கு நாறுங் கூந்தலைக் செழுமை மேகம்[7] என்றும் மலஞ்சொரி கண்களை வடிவாள்[8] என்றும் நாறிவரும் எச்சில்தனை நல்லமுதென்றும் நண்ணுஞ்சளி நாசியினை நற்குமிழென்றும்[9] மூட மனிதர் மயங்கி மூழ்கிக் கிடப்பதைக் கண்டு வருந்திய சித்தர், நிலையாமையை உணர்த்திப் பெண்ணாசையைத் துறக்க வழிகாட்டுவர். பாம்பாட்டிச் சித்தர் பெண்ணாசை பொல்லாதது எனுங் கருத்தை,

‘வெயில் கண்ட மஞ்சள் போன்ற மாதரழகை
விரும்பியே மேல் விழுந்து மேவு மாந்தர்
ஒயில் கண்டே இலவு காத்தோடுங் கிளிபோல்
உடல் போனால் ஓடுவார் என்றாடாய் பாம்பே’ [10]

என மரணத்தை நினைவூட்டி எச்சரிக்கை செய்கின்றார். அழிவு தரும் பெண்ணாசையை விடுதல் எளிதன்று என உணர்ந்தவர்கள் சித்தர்கள். பெண்ணாசையை ஒழித்து விட்டேன் எனக்கூறும் பலர், தனியே பெண்ணைக் கண்டால் அவளுக்குச் சரணம் செய்வார். அருகிலிருந்து பெண் கூறுவதை இறைவனாலேயே தட்ட முடியாது என்றால், மற்றவரால் இயலுமா எனப் பெண்ணாசைத் துறத்தல் எளிதன்று என்பதை விளக்கி, 'இப்பெண்ணாசையே இறைவனை அடையும் நெறியை அழிக்கும்' எனவும் 'இறைவனுடைய நினைப்பையே மறக்கடித்து விடும்' எனவும் 'உடலையும் கெடுத்துவிடும்' எனவும் சட்டை முனி,

'மாறான பெண்ணாசை விட்டே னென்பார்
மருவி அவள் தனிப்பட்டால் சரணஞ் செய்வார்
தாறான சயனத்தில் பெண்தான் சொல்லில்
சதாசிவனால் முடியாது மற்றோரேது
கூறான விந்து விடக் கோபமோகங்
குறியழிக்கும் நினைவழிக்குங் கூட்டைக் கொல்லும்'[11]

என்னும் பாடலின் வழி எச்சரிக்கை செய்கின்றார். வெறும் வாய்ப்பேச்சினால் பெண்ணாசை துறந்தேன் எனக் கூறியவர்கள், சிங்காரப் பெண்ணைக் கண்டால் தம் எண்ணத்தை மறப்பர், ஞானம் கெடும்[12] என மேலும் சட்டைமுனி வலியுறுத்துவார்.

வேதங்களையும் மந்திரங்களையும் சிறிது மனப்பாடம் செய்து கொண்டு, முழு உண்மையையும் அறிந்தவர் போல் அறிவுரை கூறியும், காடு, மலைகள் கடந்தும், நதிகளில் நீராடியும் காய் கிழங்கு தின்றும் வாழும் பொய்த் துறவோர் காமத் தீயினால் சூடேறி மாண்டு போவார்கள் எனப் பெண்ணாசையின் தீமையை உரோமரிஷி விளக்குவார்.[13] பெண்ணாசையைத் துறப்பது அரிது எனக்கூறிய சட்டைமுனி, இவ்வரிய செயலையும் இறையருளால் சாதிக்க முடியும் என்பதையும் உணர்த்துகிறார். இப்பெண்ணாசைக்குக் கருவியாக இருக்கும் புலனைக் கட்டுப்படுத்தி மூலத்தையே எண்ணி வணங்கியும்[14] பெண்ணாசைக்கு அடிப்படையான விந்துவை அடக்கி யோக மார்க்கத்தில் குண்டலினியை உயர்த்தியும்[15] எண்ணத்தை விண்ணிலே ஊன்றியும் பெண்ணாசை எனும்அரவத்தை வெட்ட முடியும் எனப் பெண்ணாசையை நீக்கும் வழியினை விளக்குவார் சட்டைமுனி. இவ்வாறு பெண்ணாசை நீக்காதார்க்கு விண்ணாசை வைக்க விதி இல்லை[16] எனச் சித்தர் அறிவுறுத்துவர்.

சித்தர்கள் இல்லறத்தைக் குறைத்துப் பேசியவர்கள் அல்லர். வீடு பேற்றுக்கு இல்லறத்தைத் தடையாகவும் அவர்கள் பார்க்கவில்லை. இவர்கள் பெண்களைப் பெற்றத் தாய்ப்போல் கருதும் தன்மையர்கள். இவ்வாறிருக்க, சித்தர் பாடல்களில் சில, ஆண்களின் ஆன்ம ஈடேற்றத்துக்குத் தடையாக இருக்கின்ற இழிந்தவர்களாகப் பெண்களை சுட்டியிருப்பதன் காரணம் என்ன ? பெண்ணாசையிலிருந்து விடுபடுவது எளிய காரியமன்று எனச் சித்தர்கள் கூறியிருப்பதை முன்னம் கண்டோம். ஆன்ம சாதனைகளில் ஈடுபட்டிருக்கும் போது பெண்ணாசை ஆன்ம சாதகனின் ஒருமையைக் குலைக்கும். அங்கே தடுமாற்றம் ஏற்பட்டு ஒருமை குலைந்தால் அவனுடைய ஆன்ம சாதனைக்குரிய காலம் தள்ளிப் போகும். ஒரு பொருளிலோ செயலிலோ மனம் ஈடுபாடு கொள்வதற்கு அதுபற்றிய சிந்தனையைத் தொடர்ச்சியாக எண்ணத்தில் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். இதற்கு ஒரு காட்சியை அடிக்கடி காண்பதும் ஒரு சொல்லையோ வரியையோ தொடர்ந்து சொல்லி வருவதும் உதவும். இது போலவே ஒரு பொருளை வெறுப்பதற்கும் மறப்பதற்கும் அது பற்றிய வெறுப்புத் தரக்கூடிய சிந்தனையைத் தொடர்ச்சியாக ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். சித்தர்கள் இந்த உத்தி முறையைக் கையாண்டு பெண்ணாசையை அறுக்க முனைந்தனர் எனலாம். அம்முனைப்பின் வெளிப்பாடாகத்தான் பெண்களை அருவருக்கத்தக்க நிலையில் பாடிய பாடல்கள் உருவாகின எனக் கொள்வது பொருத்தமாக தோன்றுகிறது.

## பொருளாசை

கொடிய பெண்ணாசைக்கு எவ்வகையிலும் குறைந்ததன்று மண்ணாசையும் பொன்னாசையும். பெண்ணாசைப் போன்று வயது வரம்பற்று எல்லாக் காலங்களிலும் எல்லோரிடமும் நீக்கமற நிறைந்து உயிர்களின் நிலைப்பேற்றுக்குத் தடைக்கல்லாக விளங்குவது பொருளாசையாகும். இறையென்னும் மெய்ப்பொருளிடம் மனம் செல்லாமல் தடுப்பது உலகிலுள்ள மாயைப் பொருள்களே. இப்பொருள்கள் அனைத்தும் கனவு போன்றவை; அழியக்கூடியவை. நிலைத்தது என எண்ணும் உலகமும் உடலும் அழியக் கூடியதே. இறைவனே அழியாத நிலையான மெய்ப்பொருளாகும்[18] என உணர்ந்தவர்கள் சித்தர்கள். மண்ணும் பொன்னும் நிலையற்றவை மட்டுமல்ல. நிலையாகிய பொருளான இறையுணர்வை மறைக்கும் தன்மையன என்பதை மனிதர் உணரும் வண்ணம் உணர்த்தினர். 'மாணிக்க மாமணி முடிகளும் மார்பில் தொங்கும் பதக்கங்களும் ஆணிப்பொன் முத்தாரங்களும் அழியும் பொருள்'[19] எனப் பொன்னின் நிலையற்ற தன்மையை விளக்குவர்.

பொருள் நிலையற்றது என்பதை மேலும் விளக்குவதற்கு நாடும், நகரமும், வீடும், செல்வமும், நற்பொருள்[20] என மனிதர் எண்ணும் பொருள் அனைத்தும் மலை போன்ற செம்பொற் குவையும்[21] மாட கூட மாளிகைகளும் வண்ண மண்டபங்களும் மதில் சூழ்ந்த அரண்மனைகளும்[22] யானைகளும் சேனைகளும் தேர்களும் குதிரைகளும்[23] உடல் அழிந்த பிறகு உடன் வருவதில்லை எனும் உண்மையை உணர்த்தினர். மேலும் உலகில் நாம் நுகரும் முக்கனியும் சர்க்கரையும் மோதகங்களும் முதிர்சுவைப் பண்டங்களும்[24] பஞ்சணையும் பூவணையும்[25] வண்ணப்பட்டும் வாசனையும் வாய்த்த கோலமும் வண்கவிகையும் ஆலவட்டமும்[26] உடலில் உயிர் உள்ளவரை மட்டுமே உடன் வரும். மரணத்துக்குப் பின் எமன் உலகுக்கு அவை உடன் வரா எனத் தெளிவாக உரைத்துள்ளனர்.

மேலும், இவ்வுலக வாழ்வை மெய்யென நினைத்து அவற்றில் திளைத்து மகிழ்ந்திருப்பவர், கானல் நீரைத் தேடும் மான் போன்று அலைவர்[27] என்றும் பேய்க்குரங்கு போல இப்பேருலகில் இச்சை வைத்து நாய் நரிகள் போல் அலைவர்[28] என்றும் சித்தர் பொருளாசைக் கொண்டாரைச் சாடுவர். இப்பொன்னிச்சையோடு பூமியில் திரிந்தால், இம்மண்ணிலே பிறந்த நோக்கமாகிய இறையுணர்வை அடையல் இயலாது[29] எனக்கூறி, இப்பொருளாசையை நீக்கும் வழியையும் கூறுவர். ஆசை என்னும் பசு மாண்டால்[30] மெய்யுணர்வு பெறலாம். அதற்கு மனமென்னும் கட்டாத காளையைக் கட்டிட வேண்டுமென்பர்.[31] யோகம் பயின்று இறையுணர்வு பெறும் நெறியும் சித்தர்களால் சுட்டப்பட்டுள்ளது. இவ்வுலக ஆசையிலிருந்து நீங்குவதற்கு, வீண் வம்பு பேசாமல் மேனிலையையே நோக்கமாகக் கொண்டவர்கள் இறைவனின் பதம் அடைவார்கள். இந்நெறியில் சென்று மூவாசையையும் துறந்து முத்தி நிலையாம் சித்தி பெறலாம் என்றும் உலகிலுள்ள பொருள்களில் ஆசை ஒழித்து இறையாசை கொள்ளலாம்[32] என்றும் ஆசையைக் கொல்லும் வழியைச் சித்தர்கள் காட்டுவர். மூவாசைகளினின்றும் முற்றும் நீங்க ஐம்புலன் அடக்கம் அவசியம் என்பதைச் சித்தர்கள் உணர்த்துகின்றனர்.

## ஐம்புலன் ஆளுகை

மூவாசைகளுக்கும் மூலமாக அமைந்திருப்பது ஐம்புலனாகும். ஐம்புலனின் ஆளுகைக்கு உட்பட்டே உலக உயிர்கள் அனைத்தும் இயங்குகின்றன. எண்சான் உடலை ஆளுகின்ற ஐம்புலனுடைய ஆணைக்கு அஞ்சி இவ்வுயிர்கள் இயங்கும் தன்மையை,

> 'பட்டணத்தை யாளுகின்ற பஞ்சவர்கள் ராசாக்கள்
> விட்டுப் பிரியாமல் வீரியங்கள் தாம் பேசி' [33]
> எனவும்,
> 'எண்சான் உடம்படியோ ஏழிரண்டு வாயிலடி
> பஞ்சாயக் காரரைவர் பட்டணமுந் தானிரண்டு
> அஞ்சாமற் பேசுகிறாய் ஆக்கினைக்கு தான் பயந்து'[34]

எனவும் அழுகணிச் சித்தர் விளக்குகிறார். மோகமென்னும் உரலுக்குள் மனம் சிக்கிக் கொண்டு ஐம்பொறி என்னும் உலக்கையால் இடிக்கப்படுகிறது[35] என்னும் விளக்கத்தைக் கொண்டு ஐம்புலனே பெண்ணாசைக்கு அடிப்படை என்பதையும் ஐம்புலனே உலக இச்சைகளுக்கு மூலமாக விளங்குகிறது என்பதையும் சித்தர்கள் உணர்த்துவர். நாய் போல் பொறிகளை அலைய விடுபவர் பேயர்[36] என்றும் அந்நாய் போன்ற பொறியைக் கட்டி வைக்க வேண்டும்[37] என்றும் சித்தர் அறிவுறுத்துவர். ஐம்பொறிகளை ஆடுகளாகவும் அவற்றால் நுகரப்படும் ஐந்நுகர்ச்சிகளை அவ்வாடுகள் மேயும் காடாகவும் விளக்கி, அவ்வாடுகளை இறைவன் உறையும் ஏக வெளிக்குள்ளே, யோக வெளிக்குள்ளே ஓட்ட வேண்டும்[38] என இடைக்காடர் எடுத்துரைக்கின்றார். மேலும் ஆட்டுக்கூட்டமாகிய ஐம்புலனை, நுகர்ச்சி என்னும் புலிகள் அண்டாமல் ஓட்ட வேண்டும்[39] எனவும் விளக்கியுரைக்கிறார். ஐம்புலனின் தன்மையும் கண்டறிந்தால் அநித்தியம் போகும். ஆளுகின்ற ஐம்புலனும் வசப்படும். ஐம்புலனுடைய தன்மையை அறிந்தவர்களே ஞானக்காட்சி பெறுவர்.[40] ஐம்பொறிகளை அடக்கியவர்களுக்கு மரணமில்லை[41] எனப் புலனடக்கத்தால் கிட்டும் உயர்வுகளை சித்தர் விளக்குவர். உலகப் பொருள்கள் அனைத்தும் அழியக்கூடியவை என்றுணர்ந்தால், ஐம்பொறி அடங்கும் என்றும், இறையுணர்வு வாய்க்கும் என்றும் இடைக்காடர் ஐம்புலனை அடக்கும் வழியையும் அதனால் கிட்டும் நன்மையையும் கூறுகின்றார்.

## மனம்

ஐம்புலன் என்பது ஆசைகளின் விளைநிலமாகும். ஐம்புலன் உணர்த்த மனம் உணரும். மனம் அவற்றை ஆய்ந்து அறிந்து அவற்றின் தன்மைக்குத்தகுந்தவாறு ஏற்கவோ நீக்கவோ செய்யும். இதைப் பரிமேலழகர், குதிரையை நிலமறிந்து செலுத்தும்

வாதுவன் போல[42] மனம் நன்மை தீமையுணர்ந்து செயல்பட வேண்டும் என்கிறார். இப்படி நிலமறிந்து செலுத்தப்படும் குதிரை இலக்கை எட்டுவது போல், ஆன்மாவும் பிறவிப் பயன் நுகரும். அவ்வாறில்லாமல் புலன்வழி மனம் சென்றால் ஆன்ம ஈடேற்றத்துக்கு இடர் விளைவிக்கும் என சித்தர்கள் உணர்ந்திருந்தனர். கையொன்று செய்ய விழியொன்றைக்காண, வஞ்சக நா பொய்யைச் சொல்லி, செய் தொழிலும் மனமும் வேறாக பலநூலைப் படிப்பவர் படுகுழியில் வீழ்வர். புலன் வழியில் மனம் போனால் அறிவு போகும்[43] என சித்தர் எச்சரிப்பர். மனம் அடங்காதவர்களை, தான் என்னும் ஆணவத்தை நீக்கமாட்டார்கள், சண்டாளஞ் செய்யும் கோபத்தைத் தள்ள மாட்டார்கள், உடலால் வருகின்ற சுபபோகங்களை ஒழிக்கமாட்டார்கள், பதற்றமில்லாமல் மவுனத்தில் இருக்க மாட்டார்கள்[44] எனச் சட்டைமுனி அடையாளங்காட்டுகிறார். மனமடங்கினால் தான் ஆணவமும் சினமும் அகலும். மனமடங்காவிட்டால் தற்பரத்தை எப்போதும் அறிய இயலாது.[45] மனமடங்கினால் இறைவனை அறியவும், அடையவும் முடியும் என்பர். படம் எடுத்து ஆடும் பாம்பைப் போன்ற மனத்தை அடக்கி பெட்டியிற் பாம்பாக்க வேண்டும்[46] என்பர். அடங்காத மனமாகிய மாட்டை அடக்க வேண்டும்.[47] அவ்வாறு மனமாகிய மாடு அடங்கிய பின்னரே முக்தி வாய்க்கும்,[48] என இடைக்காடர் பாடல் விளக்கும்.

மனமடங்கி முக்தி பெற்றவர், ஏகாந்தமானதொரு பிரமந்தன்னில் பலகாலம் இருக்கலாம். அவர்களுடைய காயம் நிலைத்து நிற்கும் உறுதி பெறும்[49] எனவும் மரணமிலாப் பெருவாழ்வோடு அவர்கள் பிரமத்துக்குள்ளே ஒன்றி, ஞான குருவைப் போலவும் அரசனைப் போலவும் இந்திரனைப் போலவும் குணமுடைய மூவரைப் போலவும் பல அவதாரங்களையும் எடுக்க இயலும்[50] எனவும் சித்தர் கருதுவர். மனத்தை அடக்குபவர் இறைவனுக்கு ஒப்பான நிலையெய்த இயலும் என்பதே சித்தர் கருத்தாகும். இனி, பற்றுக்களை ஒழித்து வாழும் வகையைச் சித்தர் பாடல் விளக்கும்.

## பற்று

மக்கள் ஆசை, ஐம்புலன், மனம் ஆகியவற்றுடன் தொடர்புடைய பற்றைப் பற்றாதிருக்க வேண்டும். மக்களின் வாழ்க்கையில் ஏற்படும் திருமண பந்தம் தான் மனைவி, சுற்றம் எனப் பற்றுகளை உருவாக்குகின்றது. அப்பற்று உயிருள்ளவரையே நீடிக்கின்றது. அப்பற்று அற்றுப்போகும் பிணக்கோலத்தைக் கண்டும், அதைத் துறக்காதிருப்பது அறிவற்ற செயலாகும்[51] என்பார் பாம்பாட்டிச் சித்தர். தம் மக்கள், தம் மனைவி, தம் சுற்றம் என்னும் பற்றுடன் உழலும் மக்கள் அவர்கள் இறக்கும் போது உடன் இறப்பதில்லை[52] எனவும் பெண்டாட்டி மந்தை மட்டும் வருவாள், பெற்ற பிள்ளைகள் மயானக்கரை மட்டுமே வருவர் எனக்கூறி இப்பற்றுகள் யாவும் இறுதி வரை உடன் வராமையை[53] எடுத்துரைப்பார் கொங்கணர். இப்பற்றே பிறப்பை உண்டாக்கும். அப்பற்றைப் பற்றாது அறுத்துவிடு[54] எனக்கூறும் சித்தர் அப்பற்றறுக்கும் வழியையும் கூறுவர். புளியம் பழமும் ஓடு போலவும்[55] எண்ணெயும் நீரும் போலவும்[56] தாமரை இலையும் தண்ணீர் போலவும்[57] சேற்றில் திரிகின்ற பிள்ளைப் பூச்சி சேற்றை நீக்கல் போலவும்[58] உலகில் வாழ்ந்து கொண்டு இவ்வுலகப் பற்றுகளினின்று விலகி வாழ வேண்டும். பற்றை உணர்த்தும் மனம் என்னும் குதிரையை வாகனமாகக் கொண்டு, அறிவு என்னும் கடிவாளத்தை தன் வாயிற் பூட்டி, சினமென்னும் சாட்டையினால் அதை அடக்க வேண்டும்[59] எனவும் கோபமென்னும் மதயானை கொண்டுள்ள பற்றாகிய மதத்தை அறிவு என்னும் அங்குசத்தால் அடக்க வேண்டும்[60] எனவும் சித்தர் பாடல்கள் விளக்குகின்றன. தேனில் விழுந்திடும் ஈக்களைப் போலப் பற்றால் சிந்தை குலைந்து போகும் மானிடரை அதிலிருந்து மீட்டு வானில் பறந்திடும் வழியைக்[61] கூறுகின்றார் பாம்பாட்டிச் சித்தர். யான், எனது என்னும் பற்றறுத்தவன் வானோரில் வைக்கப்படும் எனும் உண்மையை உணர்ந்து, செத்தாரைப் போன்று திரிகின்ற மெய்ஞானிகளுக்குத் தாங்கள் இறைவனைப் பாடும்போது பயன்படுத்தும் கைத்தாளத்தின்மீது கூட பற்றிருக்கக் கூடாது என்கிறார் குதம்பைச் சித்தர்[62]. படைத்த இறைவனை மறந்ததனால் மற்ற சுற்றங்கள் தெரிகின்றன. ஆனால், இறைவனை எண்ணித் தன்னை மறந்தவர்களுக்குத் தாய் தந்தை என்னும் பற்றும் விட்டுப் போகும்[63]. உள்ளத்தில் முளைத்திருக்கும் பற்றை வேரோடு பிடுங்க வேண்டும்; அப்போதுதான் முத்தி கிட்டும். பற்றறுத்தவர் இறைவனையே பற்றாகக் கொள்வர் என்னும் திருவள்ளுவர் வாக்கிற்கொப்ப[64] உலகப் பற்றுகளைக் களைந்து இறைப்பற்றைக் கொள்ள வேண்டும். இவ்வாறு ஆசை, புலன், மனம், பற்று இவற்றிலிருந்து நாம் நீங்கினாலும் வினைப் பயனை நுகராமல் நீங்குதல் என்பது அரிதாகும். அவ்வினையாகிய வாசனையிலிருந்தும் உயிர்கள் நீங்க வேண்டும். இவ்வாசனையைப் பற்றியும் சித்தர்கள் பாடியுள்ளனர்.

## வாசனை

வாசனையாகிய குரங்கு ஐம்புலனில் நுழைந்து ஆட்டிப் படைக்கும். மனத்தைச் சின்னா பின்னம் செய்து முத்தியையும் ஞானத்தையும் அடைய விடாமல் இது தடுக்கும்.

இவ்வாசனையை அடக்கிப் பார்த்தால் குருடராய் வாழ்கின்ற மக்களுக்கு ஞான வழி கூடும்[65]. இனி, வாசனையை விட்டு விலகுகின்ற வழியையும் சித்தர் கூறுவர். உலக ஆசைகளைத் துறந்து, நம் மனம் உண்டாக்கிய வாசனையாகிய குரங்கை ஓட்டும் வழியை,

'கூடுவது எப்படிதான் ஞானமூர்த்திக்
குரங்கை விட்டு அகலுகிற வழியைச் சொல்லும்
நாடுவது உலகத்து வாதம் வந்தால்
நன்மனது உண்டானால் சாத்திரத்தில் சொல்வார்
ஊடுவது சாதுசங்கம் வேதாந்தம் பார்த்தால்
உத்தமனே வாசனையாம் குரங்குபோகும்
ஆடுவதுதொத்த வாசனையில் ஏற்றும்
அப்படியே உலகத்தில் அனேகம் பேரே'[66]

என சட்டைமுனி நாயனாரின் பாடல் விளக்கும். உலகப் பற்றிலே மனம் வைத்து ஆடுபவர்களுக்கு வாசனையாகிய வினை மேலும் மேலும் கூடிக்கொண்டே போகும். இத்தகையவர்கள்தான் இவ்வுலகில் அதிகம் இருக்கின்றார்கள்.
இறைக்க இறைக்க ஊறுகின்ற கேணியைப் போல், வினைகளை ஒவ்வொன்றாய்க் கடக்க கடக்க பலவினைகள் அடுத்தடுத்து எழும்பிக் கொண்டேயிருக்கும். இக்கருத்தையே,

'இறைக்க வல்லோ ஊறினதோர் கேணியைப்போல்
எடுக்க எடுக்க எழும்பி வரும் வாசனைத்தான்'[67]

என்பார் சட்டைமுனி. மறைக்க மறைக்க வாசனை 'லகிரி'[68] கொள்ளும் என்பர்; வாசனையை எழும்பாமல் கொன்றவன் ஞானி; அதை ஏகாமல் அடித்தவன் சித்தன்.[69] வாசனையை எழும்பாமல் அடிப்பதற்கு மௌனத்தில் இருக்க வேண்டும்.[70] மௌனம் என்பது அட்டாங்க யோகத்தில் இறுதி நிலையாகிய சமாதி நிலையைக் குறிப்பது. 'எழும்பாமல் வாசனைத்தான் போச்சுதானால் ஏதுமில்லை சுத்த வெளியிருளும் போகும்'[71] என வாசனையை நீக்கும் வழிமுறையைச் சித்தர் போதிப்பர். இவ்வாறு பிறவி நோய் தீர்வதற்குத் துறவியானவர்கள் 'சும்மா' இருப்பார்கள். மனத்தில் நீக்க வேண்டியவற்றை விளக்கிய சித்தர்கள், மனத்தில் ஏற்க வேண்டியவற்றையும் விளக்குவர்.

## ஒழுக்கம் போற்றல்

தனிமனித ஒழுக்கத்தை கடைப்பிடிப்பதன் வழியாக அகத்தினுள் இறையை இருத்தி அதை உணரவும் முடியும் என உலகுக்குச் சித்தர்கள் உணர்த்தியுள்ளனர். அளவிறந்த காமமும் களியாட்டமும் பொருளாசையும் தீய எண்ணமும் தீமை பயக்கும் சொல்லும் நீக்கப்பட வேண்டும். புலன் வழிச் செல்லும் மனம் நெறிப்படுத்தப்பட வேண்டும். அந்த தீமையற்ற மனதில் தூய்மையும் அன்பையும் ஒழுக்கத்தையும் நிறைக்க வேண்டும். ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்பட வேண்டிய ஒன்று என்பதை உணர்ந்து சித்தர்கள் நடந்தனர். மரணமற்ற பெருவாழ்வு வாழ்வதற்கு வழிகூறும் சித்தர்கள் மனதைப் பாவம் செய்யாதிருக்கச் சொல்கின்றனர். பாவம் செய்தால் சினம் கொண்டு எமன் கொண்டு செல்வான். எனவே, மரணத்தை வெல்ல பாவம் செய்யாமல் வாழ வேண்டும் என்பர்.[72] இங்கு பாவம் என்பது நம்மிலும் தாழ்ந்தவர்களைத் துன்புறுத்துவது, அடைக்கலமடைந்தோரைக் கெடுப்பது, யார்க்கும் வஞ்சனை செய்வது போன்ற தீயச் செயல்களைக் குறிக்கும். இக்கருத்தை,

'பஞ்சைப் பனாதியை அடிக்காதேயந்த
பாவம் தொலைய முடியாதே
தஞ்சமென்றோரைக் கெடுக்காதே யார்க்கும்
வஞ்சனை செய்ய நினையாதே'[73]

என்னும் கொங்கணர் பாடலால் அறியலாம். மேலும் நம்மை வைதவரையும் வையாமல், இந்த உலகமே ஏமாற்றினாலும் நாம் பிறரை ஏமாற்றாமல், தீய செயல்களை எல்லாம் நீக்கி, பறவை போன்ற சிறு உயிர்களுக்கும் தீங்கு இழைக்காமல் வாழ வேண்டும் எனச் சித்தர்கள் வலியுறுத்துவர்.[74]

பொய், கொலை, களவு போன்ற தீயச்செயல்களை நீக்க வேண்டுமென்பர் சித்தர்.[75] சொல்லுதற்கரிய சூது, பொய், மோசம்

போன்றவற்றைச் செய்தால், செய்தவரோடு அவருடைய சுற்றமும் நாசமாகும்[76] என எச்சரிக்கின்றார் கடுவெளிச் சித்தர். சத்தியம் தவறாமல் நடக்க வேண்டும், சண்டாளத்தனம் செய்யக்கூடாது, நித்தியக் கருமங்களை தவறக்கூடாது, நிஷ்டையுடன் சமாதியில் நிலைக்க வேண்டும், புண்ணியத்தை மறக்கக் கூடாது, பூசல் கொண்டு தர்க்கத்தில் ஈடுபடக்கூடாது[77] எனத் தனி மனிதன் ஒழுக வேண்டிய நெறிமுறைகளை அகத்தியர் விளக்குகின்றார். ஒழுக்கத்தின் அடிப்படையாக அல்லது அக ஒழுக்கத்தின் வெளிப்பாடாகச் சொல் அமைந்திருப்பதனால் மனிதன் தீமை பயக்கும் சொல்லைச் சொல்லாமல் வாழ்வது அறமாகும்.

கஞ்சா புகைப்பது, கள் குடிப்பது, தற்கொலை செய்து கொள்வது முதலிய ஒழுக்கமற்ற செயல்களையும் சித்தர்கள் கண்டிப்பர்.[78] சினத்தை விட்டொழித்தால்தான் சித்தி கிட்டும். எனவே சினம் கொள்வதை விலக்க வேண்டும்.[79] மனக்கட்டுப்பாடு கொண்டு ஒழுக்கமற்ற செயல்களிலிருந்து விலகி இருக்கும் வழியைச் சொல்லும் சித்தர், பிச்சை எடுப்பதையும் பெண்ணாசைக் கொண்டு அலைவதையும் இச்சை கொள்வதையும் நீக்க வேண்டும் என்பர்.[80] இவற்றையெல்லாம் புறந்தள்ளி நல்ல வழிதனை நாட வேண்டும், எந்நாளும் இறைவனைத் தேட வேண்டும், மெய்ஞானிகள் கூட்டத்தில் சேர வேண்டும்[81] என மக்கள் கொள்ள வேண்டிய கருத்துக்களையும் சித்தர்கள் அறிவுறுத்தியுள்ளனர். இல்லையென வரும் ஏழைகளுக்கு இருந்தால் அன்னம் கொடுக்க வேண்டும். இன்று இல்லை நாளைப் பார்க்கலாம் என்று சொல்லக் கூடாது[82] எனவும் அறிவுரை கூறுவர். வாய்ப்பு அமையும் போது தாமதிக்காமல் தருமஞ் செய்ய வேண்டும்.[83]

> 'கண்டோருஞ் சொல்வார் கருத்தார் பெரியோரை
> தொண்டுசெய்து பெற்ற சுகம்'[84]

என்னும் பாடலின் வழி பெரியோருக்குத் தொண்டு செய்து சுகம் பெறலாம் என்னும் கருத்தைக் குறிப்பிட்டுள்ளார். இங்கே 'பெரியோர்' என்னுஞ் சொல் பெரியோரையும் முதியோரையும் குறிப்பதாக நேரடிப் பொருள் கொள்ளலாம். ஆனால் மெய்ஞானிகளுக்குச் சீடராக, தொண்டு செய்து கிட்டும் ஆன்ம சுகத்தையே இப்பாடல் மறைபொருளாகக் கொண்டுள்ளது எனப் பொருள் கொள்வது இங்கே பொருத்தமாகத் தெரிகிறது.

> 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
> நன்றே நினைமின்'[85]

> எனத் திருமூலரும்,

> 'ஒருவனென்றே தெய்வத்தை வணங்க வேணும்
> உத்தமனாய் பூமிதனி லிருக்க வேணும்'[86]

என அகத்தியரும் இறையுணர்வும் ஒழுக்கமும் இரண்டறக் கலந்து விளங்க வேண்டியதன் இன்றியமையாமையை உணர்த்துகின்றனர். சித்தர்கள் அடிப்படையில் மனச்செம்மையை வலியுறுத்துகின்றனர். அகத்தியர்,

> 'மனமது செம்மையானால் மந்திரஞ் செபிக்க வேண்டாம்
> மனமது செம்மையானால் வாயுவை உயர்த்த வேண்டாம்
> மனமது செம்மையானால் வாசியை நிறுத்த வேண்டாம்
> மனமது செம்மையானால் மந்திரம் செம்மையாமே'[87]

என்று மனச்செம்மையின் சிறப்பை உணர்த்துகிறார். உயிர்களிடத்தில் அன்பு, இனிய மெய்ச்சொல், பெரியோர்களைப் போற்றல், தருமஞ் செய்தல் முதலிய நல்லொழுக்கங்கள் மனித உள்ளத்தை தூய்மையாக்கிச் செம்மைப்படுத்துகின்றன. இவ்வாறு செம்மைப்பட்ட மனம், இறைவனை இருத்துவதற்கு ஏற்ற இடமாகி விடுகிறது. தூய்மையினால் செம்மையுற்ற உள்ளத்தில் இறைவனைத் துலங்கச் செய்வதற்குச் சித்தர்கள் யோக நெறியை மேற்கொண்டனர்.

## முடிவுரை

சித்தர் பாடல்கள், மறைபொருள் உத்திகளைக் கொண்டும் கற்பவரைக் கவரும் நயங்களைக் கொண்டும் மக்களின் ஆன்ம ஈடேற்றத்துக்குப் பல்வேறு நெறிகளைப் போதித்துள்ளன. மூவாசைகளுக்கு அடிமைப்பட்டு மனிதர்கள் துன்பப்படுவதையும் இம்மூவாசைகளுக்கும் மூலமாக அமைந்திருப்பவை ஐம்புலன்களே என்னும் கருத்தையும் சித்தர் பாடல்கள்

தெளிவுபடுத்தியுள்ளன. ஐம்புலன்களின் வழி மனம் செல்லுவதனால் அறிவு அழிந்து, ஆணவம் மேலோங்கி, பண்பட வேண்டிய மனம் மென்மேலும் புண்பட்டு மாயையில் உழல நேரும். மனம் பண்பட்டு, பக்குவமுற்று ஆன்மத் தெளிவு பெறுவதற்கு உலகியல் பற்றுக்களைப் பற்றாதிருக்க பழக வேண்டும். பழவினையாகிய வாசனை என்பது நம் ஐம்புலன்களையும் ஆட்டிப் படைக்கும் வல்லமையுடையது. வாசனை வெல்லுதற்கரியது. ஒவ்வொருவரும் அதைக் கடந்துதான் ஆக வேண்டும். அதைக் கடப்பதற்கு யோக நெறியும் குருவருளும் துணைபுரியும் என சித்தர் பாடல்கள் விளக்குகின்றன. புலன்வழிச் செல்லும் மனதை நெறிப்படுத்த ஒவ்வொரு மனிதனும் ஒழுக்கத்தைப் பேண வேண்டும். ஒழுக்கத்தைப் பேணப் பழகினால் மனம் செம்மையுறும். செம்மையான மனதில் சீவன் / சிவன் (இறைவன்) இருப்பதை உணர்ந்து கொள்ளலாம்.

## அடிக்குறிப்பு

1. இரா. மாணிக்கவாசகம், நம் நாட்டுச் சித்தர்கள், 1982: 47.
2. சித்தர் பெரிய ஞானக்கோவை, வா. சரவண முத்துப்பிள்ளை பதிப்பு: சென்னை, 1969.
3. மேலது, சட்டைமுனி, பா. 90: 694.
4. மேலது, பாம்பாட்டி, பா. 58: 209.
5. மேலது, பாம்பாட்டி, பா. 56: 209.
6. மேலது, பாம்பாட்டி, பா. 57: 209.
7. மேலது, பாம்பாட்டி, பா. 54: 209.
8. மேலது, பாம்பாட்டி, பா. 53: 209.
9. மேலது, பாம்பாட்டி, பா. 55: 208.
10. மேலது, பாம்பாட்டி, பா. 50: 208.
11. மேலது, சட்டைமுனி, பா. 87: 693.
12. மேலது, சட்டைமுனி, பா. 89: 693.
13. மேலது, உரோமரிஷி, பா. 11: 355.
14. மேலது, சட்டைமுனி, பா. 5: 670.
15. மேலது, சட்டைமுனி, பா. 87: 693.
16. மேலது, இடைக்காடர், பா. 58: 230.
17. சித்தர் ஞானக்கோவை, பட்டினத்தார், பா. 35: 107.
18. மேலது, இடைக்காடர், பா. 82: 233.
19. மேலது, பாம்பாட்டி, பா. 42: 207.
20. மேலது, பாம்பாட்டி, பா. 40: 207.
21. மேலது, பாம்பாட்டி, பா. 44: 207.
22. மேலது, பாம்பாட்டி, பா. 43: 207.
23. மேலது, பாம்பாட்டி, பா. 41: 207.
24. மேலது, பாம்பாட்டி, பா. 46: 207.
25. மேலது, பாம்பாட்டி, பா. 45: 207.
26. மேலது, பாம்பாட்டி, பா. 49: 207.
27. மேலது, இடைக்காடர், பா. 62: 231.
28. மேலது, இடைக்காடர், பா. 60: 230.
29. மேலது, இடைக்காடர், பா. 15: 225.
30. மேலது, கொங்கணர், பா. 42: 341.
31. மேலது, இடைக்காடர், பா. 82: 232.

32. மேலது அழுகணி, பா. 24: 326.
33. மேலது, அழுகணி, பா. 2: 322.
34. மேலது, சட்டைமுனி, பா. 17: 673.
35. மேலது, இடைக்காடர், பா. 99: 235.
36. மேலது, இடைக்காடர், பா. 103: 235.
37. மேலது, இடைக்காடர், பா. 27: 226.
38. மேலது, இடைக்காடர், பா. 101: 235.
39. மேலது, திருவள்ளுவர் ஞானம், பா. 18: 133.
40. மேலது, இடைக்காடர், பா. 18: 237.
41. பரிமேலழகர் உரை, திருக்குறள், 442.
42. <u>சித்தர் பெரிய ஞானக்கோவை.</u>, கருவூரார், பா. 7: 361.
43. மேலது, சட்டைமுனி, பா. 32: 677.
44. மேலது, காகபுசுண்டர், பா. 29: 735.
45. மேலது, இடைக்காடர், பா. 104: 235.
46. மேலது, இடைக்காடர், பா. 113–236.
47. மேலது, இடைக்காடர், பா. 13–225.
48. மேலது, காகபுசுண்டர், பா. 58: 743.
49. மேலது, காகபுசுண்டர், பா. 53: 742.
50. மேலது, பாம்பாட்டி, பா. 109: 217.
51. மேலது, பாம்பாட்டி, பா. 48: 208.
52. மேலது, கொங்கணர், பா. 81: 347.
53. மேலது, இடைக்காடர், பா. 19: 225.
54. மேலது, பாம்பாட்டி, பா. 72: 211.
55. மேலது, பாம்பாட்டி, பா. 74: 212.
56. மேலது, பாம்பாட்டி, பா. 70: 211.
57. மேலது, பாம்பாட்டி, பா. 73: 211.
58. மேலது, பாம்பாட்டி, பா. 78: 212.
59. மேலது, பாம்பாட்டி, பா. 76: 212.
60. மேலது, பாம்பாட்டி, பா. 81: 213.
61. மேலது, குதம்பைச் சித்தர், பா. 24: 254.
62. மேலது, அழுகணிச்சித்தர், பா. 26: 326.
63. திருக்குறள், 350.
64. <u>சித்தர் ஞானக்கோவை.</u>, சட்டைமுனி, பா. 51: 683.
65. மேலது, சட்டைமுனி, பா. 52: 683.
66. மேலது, சட்டைமுனி, பா. 55: 684.
67. மேலது, சட்டைமுனி, பா. 55: 684.
68. மேலது, சட்டைமுனி, பா. 56: 684.
69. மேலது, சட்டைமுனி, பா. 56: 684.
70. மேலது, சட்டைமுனி, பா. 56: 684.
71. மேலது, சட்டைமுனி, பா. 56: 684.
72. மேலது, கடுவெளி, பா. 1: 256.

73. மேலது, கொங்கணர், பா. 86: 348.

74. மேலது, கடுவெளி, பா. 25: 260.

75. மேலது, கொங்கணர், பா. 90: 348.

76. மேலது, கடுவெளி, பா. 3: 256.

77. மேலது, அகத்தியர், பா. 9: 308.

78. மேலது, கடுவெளி, பா. 29: 260.

79. மேலது, இடைக்காடர், பா. 14: 225.

80. மேலது, கடுவெளி, பா. 10: 257.

81. மேலது, கடுவெளி, பா. 6: 257.

82. மேலது, கொங்கணர், பா. 85: 347.

83. மேலது, கொங்கணர், பா. 82: 347.

84. மேலது, காகபுசுண்டர், பா. 12: 770.

85. மேலது, திருமந்திரம், பா. 2104.

86. சித்தர் பெரிய ஞானக்கோவை., அகத்தியர், பா. 4: 307.

87. மேலது, அகத்தியர், பா. 1: 313.

## துணை நூல் பட்டியல்


1. சித்தர் பெரிய ஞானக்கோவை. வா. சரவண முத்துப்பிள்ளை பதிப்பு: சென்னை, 1969.

2. சித்தர் ஞானக்கோவை. மே. வீ. வேணுகோபாலப்பிள்ளை பதிப்பு: சென்னை, 1947.

3. திருக்குறள், பரிமேலழகர் உரை.

4. மாணிக்கவாசகம், இரா. நம் நாட்டுச் சித்தர்கள். அன்னை அபிராமி அருள்: சென்னை, 1982.

5. திருமந்திரம். தொகுதி 1, கழகம்: சென்னை, 1962 & 1963.